பக்கங்கள்: 09

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 மார்கழி 16 செவ்வாய்க்கிழமை 31.12.2024 கதிர் 054

## இது ரகசியம் அல்ல!

பொதுத் தேர்தலில் தமிழ் அரசுக் கட்சி பெற்ற பெரு வெற்றியைத் தொடர்ந்து, அந்தத் தேர்தலில் படுதோல்வி அடைந்த தமிழ் தேசியம் பேசும் ஏனைய ☞ 2

# ஆட்சியில் அனுபவம் இன்மையே அரிசித் தட்டுப்பாட்டுக்குக் காரணம்

## ஐக்கிய தேசியக் கட்சி தவிசாளர் விமர்சிப்பு

நாட்டில் அரிசி, தேங்காய் போன்ற அடிப்படை பொருட்களின் தட்டுப்பாடு மற்றும் விலை அதிகரிப்புக்கு, ஆட்சியாளர்களின் அனுபவமின்மை மற்றும் முகாமைத்துவம் செய்யத் தெரியாமையே காரணம் என்று ஐக்கிய தேசிய கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

அவர் கட்சியின் காலி மாவட்டப் பணியிடத்தில் நேற்றுச் செய்தியாளர்களைச் சந்தித்தபோது இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

நாட்டை ஆட்சி செய்யக்கூடிய ஆட்சியாளர்களுக்கு அனுபவம் மிக முக்கியமாகும் என முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தொடர்ந்து தெரிவித்து வந்திருந்தார். அனுபவமுள்ளவர்களை நாடாளுமன்றத்துக்கு அனுப்புமாறு தேர்தல் காலத்தில் அவர் தெரிவித்தபோது அவரைக் கேலி செய்தார்கள். தற்போது மக்கள் பெரும் பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்துள்ளனர்.

தேங்காய் விலை எப்போதும் இல்லாத வகையில் அதிகரித்துள்ளது. குரங்குகளின் பிரச்சினையே தேங்காய் விலை அதிகரிப்புக்கு காரணம் என ஆளும்தரப்பினர் தெரிவிக்கின்றனர். ஆனால் கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் குரங்கும் இருந்தது ரணிலும் இருந்தார். தேங்காயும் இருந்தது என்பதை நினைவில் கொள்ளவேண்டும்.

அதேபோன்று அரிசிப் பிரச்சினையும் தற்போது பெரிதாகத் தலைதூக்கி இருக்கிறது. மக்கள் ☞ 2

## பாடசாலை நாட்கள் குறைப்பு

2025 ஆம் ஆண்டில் பாடசாலைகள் கட்டாயம் நடைபெறவேண்டிய நாட்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டுள்ளது.

வருடத்திற்கு 210 நாட்களுக்கு பாடசாலைகள் நடத்தப்படுவது கட்டாயம் என்கிற கொள்கையை ஆளும்தரப்புக் கொண்டிருந்தாலும், 2025இல் அதன் எண்ணிக்கையை 181 நாட்களாக குறைக்க கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது. ☞ 2

# அபிவிருத்தித் திட்டங்களை முறையாக முன்னெடுப்போம்

## அமைச்சர் நளிந்த தெரிவிப்பு

எமது அபிவிருத்தி வேலைத் திட்டங்களை 2025ஆம் ஆண்டு முதல் திட்டமிட்ட வகையில் முறையாக முன்னெடுப்போம். அதற்கான தலைமைத்துவத்தை நாம் வழங்குவோம் என்று சுகாதாரம் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அவர் களுத்துறை மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவராகக் கடமைகளைப் பொறுப்பேற்ற பின்னர் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

நாம் திட்டமிட்ட வகையில் முறையாக அபிவிருத்தி ☞ 2

## அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி

# மன்னார் நகரில் நேற்று கையெழுத்து வேட்டை

அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி மன்னார் நகரில் நேற்றுக் கையெழுத்துக்கள் சேகரிக்கப்பட்டன.

போராளிகள் நலன்புரி சங்கத்தின் ஏற்பாட்டில் மன்னார் பேருந்து தரிப்பிடத்தின் முன்பாக கையெழுத்துக்கள் சேகரிக்கப்பட்டன.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு நீண்ட காலமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளையும் மறுவாழ்வு அளிக்கப்பட்டு சமூகமயப்படுத்தப்பட்ட

பின்னர் நீதிமன்றத்தினால் விடுதலை செய்யப்பட்ட பின்பும் மீண்டும் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ள போராளிகளையும் புதிய ஆளும்தரப்பு விடுவிக்கவேண்டும் என வலியுறுத்தி இந்தக் கையெழுத்துக்கள் சேகரிக்கப்படுகின்றன.

பொதுமக்கள் பலரும் ஆர்வத்துடன் கையெழுத்திட்டனர்.

# தீர்வு முயற்சியில் ஆளும்தரப்பினது நல்லெண்ண வெளிப்பாடு இல்லை

## சிறீதரன் எம்.பி. தெரிவிப்பு

புதிய ஆளும்தரப்பு அரசியல் தீர்வு முயற்சியில் எந்தவொரு நல்லெண்ணத்தையும் வெளிப்படுத்தவில்லை. கருத்துக்களை சொல்வதாகவே இருக்கிறது. அதற்கான முயற்சிகளை முன்னெடுக்கவில்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் கிளிநொச்சி கிளையின் ஏற்பாட்டில் நத்தார் தின நிகழ்வும் ஆண்டிறுதி ஒன்று கூடல் கட்சிப் பணியிடத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. அங்கு உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழர்களின் தேசிய அபிலாசைகளை வென்றெடுக்கின்ற தமிழரின் இருப்பை தக்கவைக்கின்ற ஆண்டாகப் புதிய ஆண்டு அமையவேண்டும். கடந்த காலங்களில் நிகழ்ந்த அனுபவங்களை வைத்து கட்சிக்குள்ளும் சரி கட்சிக்கு வெளியிலும் சரி சவால்களை எதிர்கொண்டு பயணிப்போம்.

இது தொடர்பாக கரிசனையோடு இருக்கின்றோம். புதிய தீர்வை தரவேண்டும் அதற்காக இணைந்து ☞ 2

# டின் மீன் விலை பற்றிய அறிவிப்பு

டின் மீன்களுக்கான அதிகபட்ச சில்லறை விலையை நிர்ணயிக்கும் முன், சந்தைக்கு அனுப்பப்படும் உள்நாட்டு டின் மீன்களை தற்போதைய அதிகபட்ச சில்லறை விலையில் விற்க வேண்டும் என்றும், இறக்குமதி செய்யப்பட்ட டின் மீன்களை பழைய விலையில் விற்கலாம் என்றும் நுகர்வோர் விவகார ஆணையம் அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அதிகபட்ச சில்லறை விலையைவிட அதிக விலையில் டின் மீன்களை விற்கப்படுவது அவதானிக்கப்படுவதாக அதிகாரசபை மேலும் தெரிவித்துள்ளது.

# ஜனாதிபதி அநுரவும் எம்மை ஏமாற்றினார்

## காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் ஆதங்கம்

வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் தாய்மாரின் கண்ணீருக்கு பதில் தருவார் என்று கூறிய புதிய ஜனாதிபதியும் ஏமாற்றியுள்ளார் என வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கவலை தெரிவித்தனர்.

கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்ற கவனயீர்ப்புப் போராட்டத்தின்போது செய்தியாளர்களிடம் பேசியபோது இதனைத் தெரிவித்தார். இந்தப் போராட்டம் நேற்றுக் காலை 10 மணியளவில் கிளிநொச்சி வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் அலுவலகம் முன்பாக இடம்பெற்றது. காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளது படங்களை ஏந்தியவாறு குறித்த போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தின் நடுவில் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

எமது பிள்ளைகள் கையளித்தும், சரணடைந்தும் காணாமல் ஆக்கப்பட்டள்ளனர். கைது செய்யப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டும் உள்ளனர். குழந்தைகளும் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர்.

காணாமல் ஆக்கப்பட்ட எமது பிள்ளைகளைத் தேடி நாங்கள் தொடர்ந்தும் போராடி வருகின்றோம். அவர்களுக்கு என்ன நடந்தது என்ற உண்மையை கண்டுபிடிக்க சர்வதேசம் முன்வர வேண்டும் என வலியுறுத்தி வடக்கு கிழக்கில் தொடர்ந்தும் போராடுகின்றோம்.

இதற்கு முன் இருந்த ஆட்சிகள் எம்மை ஏமாற்றின. தொடர்ச்சியாக ஏமாற்றப்பட்ட நிலையில் சர்வதேசத்திடம் நீதி கேட்டு போராடுகிறோம். ஆண்டுகள் பல கடந்தாலும், எமது போராட்டத்துக்கான தீர்வும், நீதியும் இன்றுவரை கிடைக்கவில்லை. எமக்கு நீதி கிடைக்கும் வரை நாங்கள் தொடர்ந்தும் போராடுவோம். ☞ 2

## உணவு விளம்பரங்களில் சிறுவர்கள்

# நடிக்கத் தடை விதித்து வர்த்தமானி வெளியீடு

2025 ஜனவரி முதலாம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் உணவுப் பொருட்களின் விளம்பரங்களில் 12 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் இடம்பெறுவதைத் ☞ 2

# அமைச்சரின் பெயரில் பணம் வசூலித்தோரை கைது செய்க

## நீதிமன்றம் உத்தரவு

கைத்தொழில் மற்றும் அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி என்ற பெயரில் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் மக்களிடம் பணம் வசூலித்த சந்தேகநபர்களை உடனடியாகக் கைது செய்யுமாறு கொழும்பு மேலதிக நீதிவான் மொஹமட் ரிஸ்வான் நேற்று இரகசியப் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

அமைச்சரின் பெயரையும் படத்தையும் பயன்படுத்தி வட்ஸ்அப் சமூக ஊடகங்கள் ஊடாக பணம் வசூலித்த சந்தேகநபர்களை விசாரணை செய்ய அனுமதி கேட்ட வழக்கில் அதற்கான அனுமதியை வழங்கிய நீதிவான் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

சந்தேகநபர்களின் கணக்குகளை சரிபார்த்து அறிக்கை சமர்ப்பிக்குமாறும் நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி செய்த ☞ 2

காலைக்கதிர் Kalaikkathir

# வட, கிழக்கில் மாணவர்களின் கல்வியில் மீள் எழுச்சி தேவை

## அதற்கு உதவத் தயார் என்கிறார் ரவிகரன் எம்.பி



வடக்கு,கிழக்குத்தமிழர்தாயகத்தில் கடந்தகாலங்களில்எழுச்சிபெற்றிருந்த மாணவர்களின் கல்வி, தற்போது வீழ்ச்சியடைந்துள்ளதாக வன்னி நாடாளுமன்றஉறுப்பினர்துரைராசா ரவிகரன் கவலைதெரிவித்துள்ளார்.

இவ்வாறு வீழ்ச்சியடைந்துள்ள கல்வியில் மீள் எழுச்சி தேவையெனவும், அதற்காக உதவுவற்குத் தாம் தயாராக இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

திருகோணமலை-பத்தாம்குறிச்சி, அறிவொளிமையம் கல்விநிலையத்தில், கல்விபயிலும் மாணவர்கள் தமது கல்விச் சுற்றுலாவின்போது, முல்லைத்தீவிற்குப் பயணம்மேற்கொண்டிருந்தனர். இதன்போது குறித்த மாணவர்கள் வன்னிநாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனின் இல்லத்திற குசென்றதுடன், கலந்துரையாடலொன்றிலும் ஈடுபட்டிருந்தனர்.

குறித்த கலந்துரையாடலில் மாணவர்கள் முன்னிலையில்கருத்துத்தெரிவிக்கையிலேயே நாடாளுமன்ற உறுப்பினர் மேற்கண்டவாறு தெரிவித் துள்ளார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் -

கடந்தகாலங்களில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில்மாணவர்களின்கல்வித்தரம் முன்னிலையில் இருந்தது.

ஆனால் தற்போது வடக்கு, கிழக்கில் எமது மாணவர்களின் கல்வித்தரம் குறைவடைந்து செல்கின்ற நிலைகளைக் காண்கின்றோம். இந்த நிலை மாறவேண்டும்.

எனவே அனைவரும் கல்விகற்க வேண்டும், சிறந்த பெறுபேறுகளைப் பெறவேண்டும், உயர்ந்த நிலைகளைப் பெறவேண்டும் என்பதே மாணவர்கள் அனைவரதும்ஒரேஇலக்காகஇருக்கவேண்டும்.

எமது மாணவர்கள் கல்வியில் பிரதேசம், மாவட்டம், மாகாணம் என்ற நிலைகளைக் கடந்துதேசியரீதியிலும்வெற்றிபெறவேண்டும்.

மாணவர்கள் சிறந்தமுறையில் கல்விகற்பதற்காகஉதவிகளைவழங்குவதற்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள், புத்திஜீவிகள், புலம்பெயர் உறவுகள் என அனைவரும் தயாராக இருக்கின்றோம்.

இவ்வாறிருக்கும்போது வடக்கு, கிழக்கு மாணவர்கள் தேசியரீதியில் முதல்நிலை பெற்றார்கள் என்ற நிலையை ஏன் ஏற்படுத்தமுடியாது. அது மாணவர்களான உங்களின் கைகளிலேயே இருக்கின்றது.

அதேவேளை கல்வியில் சிறந்து விளங்குவதைப்போல, ஒழுக்கத்திலும் சிறந்துவிளங்கவேண்டும். வடக்கு, கிழக்குத் தமிழ் பிள்ளைகள் கல்வியிலும், ஒழுக்கத்திலும் சிறந்தவர்கள் என்ற நிலையைக்கொண்டுவரவேண்டும்.

இவ்வாறுஎமதுமாணவர்கள்ஒழுக்கத்திலும், கல்வியிலும் சிறந்துவிளங்கும்போது எமது அடுத்தடுத்த சந்ததியினர் சிறந்து விளங்குவார்கள். - என்றார்.

## இனி இது .....

கட்சிகள் தமிழ் அரசுக் கட்சியின் முதுகில் சவாரிவிடும் கனவோடு நகர்ந்து வருவது தெரிந்ததே. இந்தத் தேர்தல் தமிழ் அரசுக் கட்சிக்கும் பின்னடைவுதான் என்றபோதும் ஏனைய கட்சிகளோடு ஒப்பிடும்போது அதுவே வடக்கு கிழக்கு எங்கும் தமிழ் மக்களின் பிரதிநிதித்துவத்தைக் கொண்ட ஒரே கட்சி என்கிற இடத்தைத் தக்க வைத்துக்கொண்டது. இதன் விளைவு அடுத்தடுத்த தேர்தல்களிலும் பிரதிபலிக்கும் என்பதை உணர்ந்துகொண்டுள்ள மற்றைய கட்சிகள் எப்படியாவது தமிழ் அரசின் முதுகில் ஏறிவிடத் துடிக்கின்றன.

அந்தத் துடிப்பை பட்டவர்த்தனமாக வெளிப்படுத்தியிருக்கிறார் அகில இலங்கை தமிழ்காங்கிரஸின்நாடாளுமன்றஉறுப்பினர் கஜேந்திரகுமார். தன்னுடைய கட்சியின் தோல்வி, பின்னடைவு, தனது கட்சிக்குள் இருக்கும் பிளவுகள் உள் அரசியல்கள் எல்லாவற்றையும் விட்டுவிட்டு இப்போது தமிழ் அரசுக் கட்சியைப் பற்றிக் கவலைப்படத் தொடங்கியுள்ளார் அவர். ஆடு நனையுதே என்று ஓநாய் அழுத கதையாக,

இலங்கைத்தமிழ்அரசுக்கட்சியும்தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் மக்கள் மத்தியில் இருந்த செல்வாக்கை இழந்த பாதையைத் தொடர்கின்ற வகையில் கட்சியின் முடிவுகள், பதவிகள் அமையக்கூடாது என்று அவர் கருத்துத் தெரிவித்திருக்கின்றார்.

கொழும்பில் உள்ள தனது வீட்டில் செய்தியாளர்களைச் சந்தித்தபோது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். தமிழரசுக் கட்சி பிரதான கட்சியாக உள்ளமையால் அந்தக் கட்சியைத் தவிர்த்து தமிழினம் முன்செல்ல முடியாது என்று தனது இயலாமையை, தோல்வியையும் அவர் இந்தச் சந்திப்பில் ஒப்புக்கொள்ளத் தவறவில்லை.

ஆனால், "கடந்தநாடாளுமன்றத்தேர்தலில் மக்கள் வழங்கியுள்ள தீர்ப்பைச் சரியாகப் புரிந்துகொண்டு, மக்களால் நிராகரிக்கப்பட்ட ஒரு சிலரின் ஆதிக்கத்தைக் கட்சி தொடர்ந்தும் அனுமதிப்பதன் ஊடாகத் தொடர்ந்தும் ஒரு மோசமான கொள்கை ரீதியான பாதையில் தமிழ்த் தேசிய அரசியலைத் தள்ளும்" - என்றும் கஜேந்திரகுமார் தெரிவித்தார்.

அவர், மாவையரை கட்சித்தலைமையில் இருந்து அகற்றி, அவரது இடத்திற்கு சிவஞானத்தைக் கொண்டு வந்ததும் அந்த நகர்வில் அப்பட்டமாக சுமந்திரனின் கை ஓங்கியிருந்ததும் குறித்தே இந்தக் கருத்தைத் தெரிவித்தார் என்பதை வாசகர்கள் புரிந்துகொள்வது அப்படி ஒன்றும் சிரமமான காரியமல்ல. இப்படி சுமந்திரனின் கை கட்சிக்குள் ஓங்கினால் தமிழ் அரசின் முதுகில் சவாரி விடமுடியாதே என்கிற கவலையில் அவர் தனது ஆதங்கத்தைக் கொட்டித் தீர்த்திருக்கக்கூடும்.

ஒரு காலத்தில் சுமந்திரன் தமிழ் அரசுக் கட்சிக்குள் இருப்பதால்தான் தனது கட்சி வளர்கின்றது என்று பகிரங்கமாகச் சொல்லிவந்தவர். என்ன குத்தி முறிந்தாலும் இனிமேல் தனது கட்சிக்கு மக்களிடம் செல்வாக்கு, ஆதரவு கிட்டாது என்கிற முடிவுக்கு வந்துவிட்டாரோ தெரியவில்லை. அதனால்தான்இப்போதுதமிழ்அரசுதான்தமிழ் மக்களின்பிரதானகட்சிஎன்றுகூறிக்கொண்டு அதனோடு ஒட்டிக்கொள்ள கடுமையாக முயற்சிக்கிறார். அதுமட்டுமல்லாமல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உடைத்து முதலில் வெளியேறிய அவர்தான் இப்போது மீண்டும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பற்றியும் உபதேசம் செய்யத் தொடங்கியிருக்கிறார்.

ஒரு பொதுப்புள்ளியில் சந்திப்பதற்குத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் சிறீதரனுடன் ஏற்கனவே பேச்சுகளை ஆரம்பித்துள்ளதாகவும், அதேபோல் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனுடனும் பேசி இருக்கிறார்என்றும்கஜேந்திரகுமார்நேற்றைய செய்தியாளர்கள்சந்திப்பில்தெரிவித்தார். இந்தப் பேச்சுகளை அடுத்த ஆண்டில முன்கொண்டு செல்லஎதிர்பார்க்கிறார்எனவும்அவர்கூறினார். தமிழ் அரசுக் கட்சி சரியான மாற்றங்களைச் செய்யுமானால் தமிழினத்துக்கும் தமிழ்த் தேசிய அரசியலுக்கும் ஒரு சுபீட்சம் கிட்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஆக மொத்தத்தில் இதுவரை மக்களிடம் சுமந்திரனை எதிர்த்து அரசியல் செய்து வந்தவர், இப்போது தமிழ் அரசுக் கட்சிக்குள்ளேயே சுமந்திரனை எதிர்த்து அரசியல் செய்யவேண்டிய நிலைக்குத் தாழ்ந்து போயிருக்கிறார் என்பது மக்கள் அவருக்குப் புகட்டிய பாடத்தின் விளைவு என்பதை அவர் எப்போது புரிந்துகொள்ளப் போகிறார் என்பது தெரியவில்லை.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் மக்கள் வழங்கியுள்ள தீர்ப்பைச் சரியாகப் புரிந்துகொண்டு, மக்களால் நிராகரிக்கப்பட்ட ஒரு சிலரின் ஆதிக்கத்தைக் தமிழ் அரசுக் கட்சி தொடர்ந்து அனுமதிக்கக்கூடாது என்று கூறும்அவர், மக்கள்தனது கட்சிக்கு வழங்கிய தீர்ப்பைச்சரியாகப்புரிந்தகொண்டிருக்கிறாரா?.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## தீர்வு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பயணிப்போம் -என்றார். குறித்த நிகழ்வில் புனித திரேசாள் ஆலயப் பங்குத் தந்தை சில்வெஸ்ரர் அடிகளார் உள்ளிட்ட கட்சி ஆதரவாளர்கள் கலந்துகொண்டனர்.

## ஆட்சியில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொருளாதார நெருக்கடியில் இருந்த காலத்தில் அவர்களுக்கு உதவியாக அனைத்து தேர்தல் தொகுதிகளிலும் தெரிவுசெய்யப்பட்ட மக்களுக்கு இலவசமாக அரிசி வழங்குவதற்கு ரணில் விக்ரமசிங்க நடவடிக்கை எடுத்திருந்தார். அதனையும் நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும்.

மக்களுக்கு இலவசமாக அரிசியைப் பகிர்ந்தளித்தபோதும் அன்றைய காலத்திலும் தற்போதுள்ள பிரதான அரிசி ஆலை உரிமையாளர்கள் 5 பேரும் இருந்தார்கள். இந்த 5 பேரும் சந்தையில் 26 சதவீத அரிசியையே விநியோகித்து வருகின்றனர். எஞ்சியநூற்றுக்கு76வீதஅரிசவிநியோகத்தை ஏனைய அரிசி ஆலை உரிமையாளர்களே தமது கைகளில் வைத்திருக்கின்றனர். சரியான முகாமைத்துவம் இல்லாததால் இன்று பொது மக்கள் பாதிக்கப்படுகின்றனர். அனுபமில்லாதவர்களின் செயற்பாடு காரணமாக அரிசித் தட்டுப்பாட்டால் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சாதாரண ஒருஹோட்டலுக்குவேலைக்கு ஒருவரை அமர்த்தும்போது, அவருக்கு அடிப்படையான தொழில் பயிற்சி வழங்கி, முறையாக அவரை குறித்த தொழிலில் படிப்படியாகஉயர்பதவிக்குநியமிக்கப்படுகிறார். ஆனால் நாட்டை நிர்வகித்து, மக்களின் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்கு எந்த அனுபவமும் இல்லாதவர்களுக்குப் பொறுப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. அதன் விளைவுகளைத் தற்போது நாங்கள் அனுபவிக்கவேண்டி இருக்கிறது. வேறு வழியில்லை.

நாட்டில் அரிசி, தேங்காய் போன்ற அடிப்படை பொருட்களின் தட்டுப்பாடு மற்றும் விலை அதிகரிப்புக்கு, ஆட்சியாளர்களின் அனுபவமின்மை மற்றும் முகாமைத்துவம் செய்யத் தெரியாமையே காரணமாகும். இந்த நிலை ஏற்படும் என்பதாலே அனுபவமுள்ளவர்களைநாடாளுமன்றத்துக்கு அனுப்புமாறு முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்து வந்தார் - என்றார்.

## அபிவிருத்தித்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கருத்திட்டங்களை முன்னெடுக்கவுள்ளோம். ஆட்சிக்கு வந்தோம் செய்தோம் என எம்மால் நடந்துகொள்ள முடியாது. நாம் நிறைவேற்ற வேண்டிய பல விடயங்கள் உள்ளன.

கடந்த காலங்களில் எடுக்கப்பட்ட தவறான தீர்மானங்களாலேயே இந்த நாடு மோசமான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. முறையாகவும் திட்டமிட்ட வகையிலும் நாட்டை கட்டியெழுப்பவே மக்கள் எமக்கு அதிகாரத்தை வழங்கியுள்ளனர். எமது வளமான எதிர்காலத்திற்காகவே இந்த மக்கள் ஆணை கிடைத்துள்ளது.

2025 ஆம் ஆண்டு முதல் திட்டமிட்ட வகையில் முறையாக எமது அபிவிருத்தி வேலைத் திட்டங்களை முன்னெடுப்போம். அதற்கான தலைமைத்துவத்தை நாம் வழங்குவோம். இதற்காகஅரசசேவையில்உள்ளஅனைவரும் எமக்கு முழு ஒத்துழைப்பை வழங்குவார்கள் என நாம் நம்புகிறோம் - என்றார்.

அவரிடம் செய்தியாளர்கள், "அடுத்த வருடம் பொருளாதாரம் உள்ளிட்ட முக்கிய பல பிரச்சினைகளை தீர்க்க ஆளும்தரப்பு எவ்வகையான நடவடிக்கைகளை முன்னெடுக்க உள்ளது?" என்று கேள்வி எழுப்பினர்.

பதிலளித்த அவர், "தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்ததன் பின்னர் பொருளாதார பிரச்சினைகள்உக்கிரமடையும், நாடுமீண்டும் வீழ்ச்சி அடையும் என எதிர்க் கட்சியினர் எதிர்பார்த்திருந்தனர். அதுவே அவர்களது பிரார்த்தனையாகவும்இருந்தது. இலங்கைக்கு ஒத்துழைப்புகளை வழங்க வேண்டாம் என சர்வதேசத்திடம் கோரிக்கைகளை முன்வைத்திருந்தனர். ஆனால் ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்க நிதியமைச்சின் அதிகாரிகளுடன் கலந்துரையாடி பல முக்கிய தீர்மானங்களை எடுத்ததுடன் 3 மாத காலத்திற்குள் நாட்டை நிலைப்படுத்த முடிந்துள்ளது.இதுவே மிகவும் முக்கியமான விடயமாகும்.

இலங்கை பொருளாதார ரீதியாக உறுதியான நிலையில் உள்ளது என்பதை சர்வதேசம் ஏற்றுக்கொண்டுள்ளது. தேசிய மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு இலங்கை தொடர்பான நம்பிக்கை கட்டியெழுப்பபட்டுள்ளது. முதலீடுகள் அதிகரித்துள்ளன. பங்குச் சந்தை வளர்ச்சி வீதம் அதிகரித்துள்ளது. சர்வதேச இராஜதந்திர உறவுகள் வலுவடைந்துள்ளன.

கடந்த காலங்களில் நிறுத்தப்பட்ட அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளன. நிலையாக உறுதிப்பாட்டைநோக்கியபாதையில்இலங்கை நகர்கிறது என்பதை சர்வதேச சமூகம் ஏற்றுக்கொண்டுள்ளது.அடுத்த வருடத்தின் தொடக்கத்தில் நல்லதொரு நிலையை எம்மால் அடைய முடியும். தற்போது அரசியல் மற்றும் பொருளாதார உறுதி நிலையை பேணுவதே எமது எதிர்பார்ப்பாகும்" - என்றார்.

## நடிக்கத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தடைசெய்து வர்த்தமானி அறிவித்தல் ஒன்று வெளயிடப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சர் வைத்தியர் நலிந்த ஜயதிஸ்ஸவினால் இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளOயிடப்பட்டுள்ளது.

டிசெம்பர் 6 நடைபெற்ற நாடாளுமன்ற அமர்வில், ஜனவரி முதலாம் திகதி முதல் 12 வயதுக்குட்பட்டசிறுவர்களைவிளம்பரங்களில் பயன்படுத்துவது தடைசெய்யப்படும் என சுகாதார பிரதி அமைச்சர் வைத்தியர் ஹசங்க விஜேமுனி அறிவித்திருந்தார். அதனடிப்படையில் இந்த வர்த்தமானி அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

## ஜனாதிபதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையில் இடம்பெற்ற தேர்தல்களில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் கண்ணீருக்கு நீதி பெற்றுக் கொடுப்பேன் என புதிய ஜனாதிபதி கூறினார். ஆனால் பல மாதங்களாகியும் இன்றுவரை அதற்கான எந்த முயற்சியும் எடுக்கவில்லை. ஏனைய ஜனாதிபதிகள் போன்று இவரும் ஏமாற்றுகிறார் என்றே உணர்கின்றோம். இன்றுவரை பாதிக்கப்பட்ட எம்முடன் பேசக்கூட இல்லை.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் வலியும், கண்ணீரும் எனக்கும் தெரியும் என்றார். அதன் வலி எனக்கு புரியும் என்றார். ஆனால் இன்றுவரை எந்த முயற்சியும் அவர் எடுத்திருக்கவில்லை.

நாங்கள் தொடர்ந்தும் ஏமாற்றபட்டே வருகின்றோம் -- என்றனர்.

## பாடசாலை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புதிய கல்வி ஆண்டின் முதல் தவணையைத் தொடங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாலும் அதிகளவிலான அரசு விடுமுறைகள் வருவதாலும் இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதன்படி, 2024ஆம் ஆண்டுக்கான மூன்றாம் தவணையை நிறைவு செய்யும் வகையில், ஜனவரி 2 முதல் 24 வரை பாடசாலைநடைபெறும். அதன்பின்னர்அடுத்த கல்வியாண்டு ஜனவரி 27 தொடங்கப்பட்டும்.

2025இல் 26 பொது விடுமுறை நாட்கள் வருகின்றன. அவற்றில் 4 விடுமுறை நாட்கள் மட்டுமே வார இறுதி நாட்களில் வருகின்றன. ஏனைய அனைத்தும் வாரநாட்களாக இருப்பதால் 210 நாட்களுக்கு பாடசாலைகளை நடத்த இயலாது, இதனால் பாடசாலைகளை நடத்தும் நாட்கள் 181 ஆக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

## மி

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முறைப்பாட்டையடுத்து குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின்கணினிகுற்றப்புலனாய்வுப் பிரிவினரால்சமர்ப்பிக்கப்பட்ட'பி'அறிக்கையை பரிசீலித்த நீதவான் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

# மாவட்ட எல்லைப் பிணக்குகளை மட்டக்களப்பில் உடனே தீருங்கள்

## ஹிஸ்புல்லாஹ் எம்.பி. வலியுறுத்து

மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி குழு கூட்டம் மாவட்ட அபிவிருத்தி குழு தலைவரும் பிரதி அமைச்சருமான அருண் ஹேமசந்திரா தலைமையில் மாவட்ட செயலகத்தில் நேற்று (திங்கட்கிழமை) நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லாஹ், மட்டக்களப்பு மாவட்டத்தில் எல்லைப் பிரச்சினையானது நீண்டகாலமாக காணப்படுவதாகவும் அவற்றை தீர்ப்பதற்கு அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் தெரிவித்தார்.



இதனை கருத்திற்கொண்ட மாவட்ட அபிவிருத்திக் குழு தலைவர் உடனடியாக விஷேட குழுவொன்றை அமைக்க இணக்கம் தெரிவித்தார்.

மேலும் மிக நீண்டகால மக்கள் குடியிருப்பு காணிகளை அரச காணிகளாக அண்மையில் மன்முனை வடக்கு பிரதேச செயலகத்தால் அடையாளப்படுத்தப்பட்ட நிலையில், மட்டக்களப்பு மஞ்சந்தொடுவாய் பிரதேச காணிகளை மீண்டும் அந்தந்த மக்களுக்கான தனியார் காணிகளாக வழங்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் அதற்கான நடவடிக்கைகளை குறித்த குழு ஊடாகமேற்கொள்ளவேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லாஹ் கோரிக்கை விடுத்ததுடன் அந்த கோரிக்கையும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.






மாவட்ட அரசாங்க அதிபர் ஒருங்கிணைப்பில் நடைபெற்ற இக்கூட்டத்தில் கிழக்கு மாகாண ஆளுநர் கலாநிதி ஜெயந்தலால் ரத்னசேகர, மற்றும் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட திணைக்களத் தலைவர்கள், முப்படைகளின் உயர் அதிகாரிகள், உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# வவுனியா சமாதான பேரவையின் கிறிஸ்மஸ் நிகழ்வு சிதம்பரபுரத்தில்

வவுனியா மாவட்ட சமாதான பேரவையின் கிறிஸ்மஸ் நிகழ்வு சிறப்பான முறையில் வவுனியா, சிதம்பரபுரம் பகுதியில் இடம்பெற்றது.

இலங்கை தேசிய சமாதான பேரவையின் திட்டத்தின் கீழ் வவுனியா மாவட்ட சர்வமத பேரவையின் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ஆர்.விக்கினேஸ்வரன் தலைமையில் இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இக் கிறிஸ்மஸ் நிகழ்வில் கத்தோலிக்க, இந்து, பௌத்தம், இஸ்லாம் மதத் தலைவர்கள் கலந்து கொண்டதுடன், தமிழ், சிங்கள, கிறிஸ்தவ, இஸ்லாமிய மாணவர்களால் அனைத்து மதங்களையும் பிரதிநிதித்துவப்படுத்திய கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

இதன்போது கிறிஸ்மஸ் தினத்தை முன்னிட்டு பரிசுப் பொருள்களும் கலந்து கொண்டவர்களுக்கு வழங்கப்பபட்டது.

இதில் மதத்தலைவர்கள், மாணவர்கள், கிராம மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.
100





# முன்பள்ளி மாணவர்களின் வருடாந்த பரிசளிப்பு நிகழ்வு



(ஹலால்தீன் )

தம்பலகமம் பரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட முள்ளிப் பொத்தானை ஈச் பாலர் பாடசாலையின் வருடாந்த கலைவிழா நேற்று காலை நடைபெற்றது.

கிண்ணியா வலயக் கல்வி அலுவலகத்தின் முன் கல்வி பொறுப்பாளர் எம். சமீம் தலைமையின் கீழ் இடம் பெற்ற இந்நிகழ்வில், முன்கல்வி பொறுப்பு ஆசிரியைகளான பாத்திமா றிஸ்தா, பாத்திமா சர்மிளா, அனஸ் உஷாமா, பெற்றோர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

பல்வேறுகலைநிகழ்ச்சிகளும் முன் பள்ளி மாணவர்களால் நடத்தப்பட்டன. அத்துடன் அவர்களுக்கான பரிசளிப்பு பொருடகளும் வழங்கப் பட்டன.



# நிலாவெளியில் சுற்றுலாவிகளுக்கு பல விதங்களிலும் அசௌகரியம்

(ஹலால்தீன் )

இலங்கையின் சுற்றுலாத்துறைக்கு பெயர் பெற்ற இடமான திருகோணாமலை நிலாவெளியில் சுற்றுலா பயணிகள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

தெரு மின்விளக்கு இரவில் எரியாமை, கட்டாகாலி மாடுகளின் அட்டகாசம், கரையோரங்களில் அமர்வதற்கான இருக்கை வசதி இல்லாமை முதலான பிரச்சினைகளை சுற்றுலா பயணிகள் எதிர்நோக்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

திருகோணாமலை நிலாவெளி, புறாத்தீவில், டொல்பின்கள், திமிங்கிலங்கள், சுறா மீன்கள், அழகிய பவளப்பாறைகள் எல்
நிறைந்த இடமாகும்.

இந்த இன்பமான நிகழ்வுகளை பார்வையிடுவதற்கும் அனுபவிப்பதற்கும் அதிகமானோர் இக்கடற்கரைக்கு வருகை தருகின்றனர்.

சுற்றுலாப் பயணிகள் இரவு 6:30 மணிக்கு பின்னர் செல்வதற்கும் அங்கிருந்து வெளியேறுவதற்கும் தயக்கம் தெரிவித்து வருகின்றனர். ஏனென்றால் அப்பகுதியில் தெருவோரம் மின்விளக்குகள் இல்லாததனாளாகும்.

இதனால் நிலாவெளி கடற்கரை உட்பட தெரு வீதிகள் மின்விளக்குகள் இல்லாததால் இருள் சூழ்ந்து காணப்படுகின்றன.

இதனால் சுற்றுலா பயணிகள் தாமதமாகி செல்வதற்கும் இயற்கையின் ரசனையை அனுபவிப்பதற்கும் முடியாமல் போகின்றன.

இதனால் சுற்றுலாத் துறையை நம்பி இருக்கின்ற சிலர் தமது வாழ்வாதாரத்தையும் இழக்க வேண்டிய நிலை ஏற்பட்டு விடுகின்றது.

எனவே தயவு செய்து இதை கவனத்தில் கொண்டு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்குமாறு சுற்றுலாப் பயணிகள் தெரிவிக்கின்றனர்.

காலைக்கதிர்
Kalaikkathir

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# சுடலை ஞானம்

ஒருவர் இறந்தால் அவரது இறுதிச் சடங்குக்காக சுடலைவரை செல்பவர்கள் வாழ்க்கையின் நிலையாமை குறித்த சிந்தனைகளால் பாதிக்கப்பட்டிருப்பார்கள். ஒருநாள் தாமும் இப்படித்தானே இந்த உலகைவிட்டு நீங்கிவிடுவோம், இருக்கும் வரையில் அடுத்தவருக்கு நன்மை தரும் வகையில், பயனுள்ள வகையில் வாழ்ந்துவிட்டுச் செல்வோமே என்று அவர்கள் சிந்திப்பார்கள். ஆனால், இந்தச் சிந்தனை நீண்ட நாள்களுக்கெல்லாம் தொடராது. சுடலையில் இருந்து வீடு சென்று சேரும் வரையும்தான். அதன் பின்னர் நிலையற்ற வாழ்வுக்கான நிலையான தமது அற்பச் செயல்களை மனிதர்கள் தொடர்வார்கள். அதனால்தான் அதனைச் சுடலை ஞானம் என்பார்கள்.

அதுபோன்றே தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பு என்கிற பெயரில் ஒரு முயற்சியை மேற்கொண்டு இருப்பதையும் சிதைத்துச் சீரழித்தமை தொடர்பில் பொதுத் தேர்தல் தோல்வியின் பின்னராக தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் ஐங்கரநேசன் கருத்துத் தெரிவித்திருக்கின்றார்.

"ஜனாதிபதித் தேர்தலின்போது தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகள் சிலவும் தமிழ் மக்கள் பொதுச் சபையும் இணைந்து உருவாக்கிய தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பு தமிழ் வேட்பாளர் ஒருவரை பொதுவாக நிறுத்தியிருந்தது. கோட்பாட்டு ரீதியாக இதனை ஏற்றுக்கொண்ட தமிழ்த் தேசியப் பசுமை இயக்கமும் இவரது வெற்றிக்காகக் கடுமையாக உழைத்தும் இருந்தது.

அவர் இரண்டு இலட்சத்துக்கும் அதிகமான வாக்குகளைத் திரட்டியிருந்தார். இது தமிழ் மக்களைத் தேசமாகத் திரட்டுவதில் கிடைத்த வெற்றியாகவே நோக்கப்பட்டது. ஆனால், நாடாளுமன்றத் தேர்தலில் தேசமாகத் திரட்டப்பட்ட மக்கள் புதிய வழிகாட்டுதல் இல்லாததால் பிரிந்து நின்று தங்கள் விருப்பத்துக்கு வாக்களித்தார்கள். இந்தநிலையில் தமிழ்ப் பொதுவேட்பாளரின் தேறிய விளைவாக கட்சியில் இருந்து அவர் நீக்கப்பட்டதும் ஜனாதிபதித் தேர்தலில் அவர் செலவழித்த கணக்கு விவரங்கள் தொடர்பான வழக்கும் மாத்திரமே எஞ்சியுள்ளன.

போருக்குப்பின்னர் தமிழ் அரசியலை நெறிப்படுத்த சிவில் அமைப்புகள் எனப்படும் குடிசார் அமைப்புகளின் வகிபாகம் இன்றியமையாததாக உணரப்பட்டது. இதன் விளைவாகவே தமிழ் மக்கள் பேரவை தோற்றம் பெற்று வெற்றிகரமாக 'எழுக தமிழ்' பேரணிகளை நடத்திக் காட்டியிருந்தது. தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைக்காகக் குறைந்தபட்சத் தீர்வுத் திட்டம் ஒன்றையும் முன்வைத்திருந்தது. தமிழ் மக்கள் பேரவையின் மீது மக்கள் மிகுந்த எதிர்பார்ப்பையும் கொண்டிருந்தார்கள். ஆனால், தமிழ் மக்கள் பேரவையின் இணைத் தலைவர்களில் ஒருவராக இருந்த முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரன் தனியான ஒரு கட்சியை ஆரம்பித்ததுடன் அது குறை ஆயுளுடன் முடிவுக்கு வந்தது.

குடிசார் அமைப்புகள் இணைந்து உருவாக்கிய தமிழ் மக்கள் பொதுச்சபைமீதும் மக்கள் நம்பிக்கை கொண்டிருந்தார்கள். இதனால்தான் பொதுவேட்பாளருக்கு தமிழ் மக்கள் திரளாக வாக்களித்திருந்தார்கள். ஆனால், அந்த நம்பிக்கையும் இப்போது பொய்த்துப்போய்விட்டது. உரிய வழிவரைபடம் அதனிடம் இல்லாத காரணத்தால் ஜனாதிபதித் தேர்தலைத் தொடர்ந்து குறுகிய கால இடைவெளியில் வந்த நாடாளுமன்றத் தேர்தலை அது எதிர்கொள்ளமுடியாமல் பின்வாங்கியது.

தமிழ்த்தேசிய உணர்வுடன் தன் பின்னால் திரண்ட மக்களுக்கு அது வழிகாட்டத் தவறியது. இதுவும் வடக்குக் கிழக்கில் ஜே.வி.பி இன் வெற்றிக்கு ஒரு காரணமாக அமைந்தது.

மக்கள் சிவில் சமூக அமைப்புகளை நம்பமுடியாத ஒரு சூழ்நிலையை சிவில் அமைப்புகளே இன்று உருவாக்கி விட்டன. அரசியலில் சிவில் அமைப்புகள் தங்களின் வகிபாகம் குறித்து மீள் பரிசீலனை செய்தால் தவிர அவற்றால் இன்னொரு கட்டத்துக்கு நகரமுடியாது. சிவில் அமைப்புகளும் சில கட்சிகளின் பினாமிகளாகவே உள்ளன.

சிவில் அமைப்புகளின் மூலம் கிடைக்கும் பிரபல்யத்தைப் பயன்படுத்தி சிலர் தேர்தலில் குதிப்பவர்களாகவும் இருக்கிறார்கள். கட்சி அரசியலை முன்னிறுத்தாத – தமிழ்த்தேசிய அரசியலை மட்டுமே குறிக்கோளாகக் கொண்ட ஒரு மக்கள் இயக்கமாக சிவில் சமூகங்கள் மாற்றம் பெற்றாலொளிய தமிழ்த் தேசிய அரசியலை வருங்காலங்களில் அவற்றால் நெறிப்படுத்த முடியாது" என்று அவர் ஆதங்கப்பட்டுள்ளார்.

இந்த முயற்சியில் ஈடுபட்டபோதே இவை ஒன்றும் ஐங்கரநேசனுக்குத் தெரியாதவைகள் அல்ல. தான் சேர்ந்தியங்க முற்பட்ட கட்சிகள் எப்படிப்பட்டவை அவை தமது சுயநலனுக்காக என்ன செய்யும் என்பது புரியாதவரோ அது குறித்த அனுபவமல்லாதவரோவும் அல்லர் அவர். அப்படியிருந்தும் இந்த முயற்சியின் ஆழ அகலம் விளைவு என்பவற்றைப் பற்றி அவராலும் அவரைப் போன்ற பலராலும் உய்த்துணர முடியாதிருந்தமை கவலைக்குரியது. தற்போதைய அரசியல் சூழலில் தமிழ்த் தேசியம் சார்பான பெரும் அழுத்தக் குழுவாக ஒரு சிவில் அமைப்பு வேண்டும், அவசியம் என்பது உண்மை. ஆனால், அதனைக் கட்டமைக்க தேசியம் சார் உண்மையோடு, அர்ப்பணிப்போடு அரசியல்வாதிகள் முன்வரவேண்டும். அத்தகையவர்களை இந்தத் தேசம் இன்னும் கண்டடையவில்லை என்பதும் அதேயளவுக்கு உண்மை.



# 'சிஸ்டம் சேஞ்ச்' அவ்வளவுதான்!

**உபுல் ஜோசப் பெர்னான்டோ**

பண்டாரநாயக்கா ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து வெளியேறி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை உருவாக்காது விட்டிருந்தால் இந்த நாட்டில் இரண்டு முகாம்கள்தான் இருந்திருக்கும். ஒன்று இடது. மற்றொன்று வலது. பண்டாரநாயக்க ஐ.தே.கவை உடைத்தார். அதன் மூலம் இடது மற்றும் வலது முகாம்களைக் குழப்பி இலங்கை சுதந்திரக் கட்சியை உருவாக்கினார். 1963ஆம் ஆண்டு கடையடைப்புப் போராட்டத்தின் ஓராண்டு நிறைவில், இலங்கையிலுள்ள அனைத்து இடதுசாரிக் கட்சிகளும் ஒன்றிணைந்து ஐக்கிய இடதுசாரி முன்னணியை உருவாக்கி மீண்டும் இடது மற்றும் வலது எனப் பிரிந்து பண்டாரநாயக்கவின் ஆளும்தரப்புக்கும் எதிர்க்கட்சியான ஐ.தே.கவுக்கும் எதிராகப் பெரும் சக்தியாக உருவெடுத்தன. இது அரசியல் நிலப்பரப்பை மறுவரையறை செய்தது. ஆனாலும், இடதுசாரிகளின் ஒற்றுமை குறுகிய காலமே நீடித்தது. இடதுசாரி முன்னணியில் இருந்த துரோகிகள் சிறீமாவோ பண்டாரநாயக்கவின் ஆளும்தரப்புடன் இணைந்ததன் மூலம் மீண்டும் இடது மற்றும் வலது முகாம்களைக் குழப்பினர். லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவரான கலாநிதி என்.எம். பெரேரா, இடது மற்றும் வலது முகாம்களுக்கு இடையிலான பிளவிற்கு மீண்டுமொருமுறை சேறுபூசும் வகையில், சிறிமாவோவின் ஆளும்தரப்பில் இணைந்தார். அதன் மூலம் இடதுசாரி ஐக்கிய முன்னணியைக் காட்டிக் கொடுத்தார்.

சுதந்திரத்திற்குப் பின்னர், இலங்கையில் பெரும் அரசியல் மாற்றங்கள் பலவும் மூன்று என்ற எண்ணில் முடியும் ஆண்டிலேயே இடம்பெற்றது. இடதுசாரி இயக்கத்தின் எழுச்சியானது, 1973, 1983, மற்றும் 2013 ஆகிய ஆண்டுகளில் இடம்பெற்றது. 'ஹர்த்தால்' இயக்கம் 1953 இல் தொடங்கியது, இடதுசாரி ஐக்கிய முன்னணி 1963 இல் நிறுவப்பட்டது. 1993இல் சந்திரிகா தலைமையில் இடதுசாரிக் கட்சிகள் ஒன்றிணைந்து கூட்டணி அமைத்தன. 2003ஆம் ஆண்டளவில், ஜே.வி.பி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து தலைமைத்துவத்தைப் பெற்று ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பை நிறுவியது. கடைசியில் 'அரகலய' மூலம் ஜே.வி.பி 2023 இல் நாட்டில் ஒரு மேலாதிக்க அரசியல் சக்தியாக உருவெடுத்தது.

இடதுசாரிகளின் எழுச்சி 1953 மற்றும் 1963 தவிர்த்து, 1993 மற்றும் 2003 ஆகிய ஆண்டுகளில் சிறீலங்கா சுதந்திரக் கட்சி மூ-லமாகவே இடம்பெற்றது. ஆனால் 2023 எழுச்சி 1953 மற்றும் 1963 இல் நடந்தது போன்று தானாகவே நிகழ்ந்தது. 2022 இல் ரணில் ஜனாதிபதியான பிறகு, இடதுசாரிகள் வேலைநிறுத்தக் கோட்பாடு ஒன்றை உருவாக்கினர்.

'இலங்கை அரசியல் 1947க்குப் பின்னர் இடதுசாரிகள் மற்றும் வலதுசாரிகள் எனப் பிளவுபட்ட முதல் முக்கிய மைல்கல் 2024 ஜனாதிபதித் தேர்தல்தான். ரணில் வலதுசாரிகளின் வேட்பாளராகப் போட்டியிட்டார், அநுர இடதுசாரிகளின் வேட்பாளராகப் போட்டியிட்டார். 1951ஆம் ஆண்டிலிருந்து, இடது மற்றும் வலது என்ற பிளவை சீர்குலைத்திருந்த சிறீலங்கா சுதந்திரக் கட்சியும் (ஸ்ரீஸியப்ஃணே) சிறீ லங்கா பொது ஜன பெரமுனவும் (ஸ்ரீஸிஃணேஃணே) இப்போது காணாமல்போயிருந்தன. அவற்றுக்குத் தெளிவான பாதை எதுவும் இல்லை.

ரணில் மற்றும் அநுரவுக்கு இடையில் 2024 இல் நடந்த போட்டி 1947இல் டி.எஸ் சேனநாயக்க மற்றும் என்.எம்.பெரேரா ஆகியோருக்கு இடையிலான மோதலைப் போன்றது. இந்த மோதலின் இடையில் சஜித் பிரேமதாசவின் ஐக்கிய மக்கள் சக்தி, 1951 இல் பண்டாரநாயக்கா அரசியல் களத்தில் இறங்கியது போல் குழப்பத்தை ஏற்படுத்தலாம் என்று இடதுசாரிகள் நம்பினார்கள்.

வலுவான இடதுசாரி சாய்வு கொண்ட ஒரு தலைவரான பண்டாரநாயக்கா அப்போதைய அரசியல் வலது இடதாகப் பிரிந்திருந்த நிலையைச் சீர்குலைக்க முடிந்தது. இதற்கு மாறாக வலது பக்கம் பெரிதும் சாய்ந்தி-ருக்கும் சஜித் இம்முறை வித்தியாசமான சவாலை இடதுசாரிகளுக்கு முன்வைத்தார். ரணில் விக்கிரமசிங்க மீதான எதிர்ப்பைப் பிளவுபடுத்துவதன் மூலம், சஜித் இடதுசாரிகளின் வெற்றியை அச்சுறுத்தினார். தனது செல்வாக்குக்கு எதிராகச் செயற்பட இடதுசாரிகளுக்குத் தூண்டுகோலாக இருந்தார். ஆனாலும் 2024 ஜனாதிபதித் தேர்தல் இறுதியில் இடது மற்றும் வலதுசாரிகளுக்கு இடையிலான போட்டியாக மாறியது.

முதலாளித்துவ கொள்கைகளை பாதுகாத்ததால் சஜித் தோற்றார். ஜே.வி.பி (ஜனதாவிமுக்தி பெரமுனா) சர்வதேசநாணய நிதியத்தின் உடன்படிக்கையில் இருந்து விலகுவதை ஆதரிக்கவில்லை என்றாலும், இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கு சர்வதேசநாணய நிதியம் தீர்வு அல்ல என்பதை அவர்கள் தெளிவுபடுத்தினர். நாட்டின் வீழ்ச்சிக்கு முதலாளித்துவ பொருளாதாரக் கொள்கைகளே காரணம் என ஜே.வி.பி. பல மேடைகளில் வலியுறுத்தியது.

ஜே.வி.பி.க்கு சவால் விடும் வகையில் முன்னிலை சோசலிசக் கட்சி எழுந்தபோது, இடதுசாரி ஆளும்தரப்பு வாய்ப்பைக் குறைமதிப்பிற்கு உட்படுத்தக்கூடிய உள் மோதல்களுக்கு எதிராக வாதிட்டு, இடதுசாரிகள் ஐக்கியத்தை வலியுறுத்தியது. இதனால் இடதுசாரி மறுமலர்ச்சியின் நம்பிக்கையுடன், 1971 மற்றும் 1988 எழுச்சிகளில் பங்கேற்று பின்னர் ஜே.வி.பியில் இருந்து பிரிந்தவர்களுடன், முன்னாள் புத்திஜீவிகள் மற்றும் பாரம்பரிய இடதுசாரிக் கட்சி உறுப்பினர்களும் அநுரகுமார திசநாயக்கவின் ஜனாதிபதித் தேர்தல்

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

# சிஸ்டம்......

4ம் பக்கத் தொடர்ச்சி...........

பரப்புரையில் திரண்டனர். ஓர் இடதுசாரி ஆளும்தரப்பு ஆட்சியைப் பிடிக்கும் என்று அவர்கள் எண்ணினர். முதல் தடவையாக, இலங்கையின் மாணவர் மற்றும் தொழிற்சங்க இயக்கங்கள் இந்த பகிரப்பட்ட கனவினால் உந்தப்பட்ட ஆளும்தரப்பின் தலைமையை மரபுரிமையாகப் பெறத் தயாராகிவிட்டன. எனினும் அநுர ஜனாதிபதியாகப் பதவியேற்றதன் பின்னர் ஓர் இடதுசாரி முடிவையும் எடுக்கவில்லை.

அரசின் நியமனங்களைப் பார்த்தால், ஓர் இடதுசாரி நியமனம் கூடச் செய்யப்படவில்லை. அநுர ஜனாதிபதியானவுடன், அவர் தனது ஆலோசகர்களாக ஐதேகவின் ஆலோசகர்களையே நியமித்தார். ஆளும்தரப்பின் பொருளாதாரப் பதவிகளுக்கு நாட்டின் முன்னணி வர்த்தகர்களை நியமித்தார். 2019இல் கோட்டா ஜனாதிபதியாக பதவியேற்றதும் கோத்தா இடது பக்கம் சாய்ந்துவிடுவாரோ என்று பயந்து கோத்தாவை வலது பக்கம் தள்ளிய ஆலோசகர்கள் இவர்கள்.

இன்று ரணிலின் பொருளாதாரக் கொள்கையை அநுர பின்பற்றுகிறார். 2015 நல்லாட்சி என்று சொல்லப்பட்ட ஆட்சியின்போது, ரணிலின் ஐக்கிய தேசியக் கட்சியின் பொருளாதாரக் கொள்கை தொடர்பில் மைத்திரிக்கும் ரணிலுக்கும் இடையில் முரண்பாடுகள் ஏற்பட்டன. ரணிலின் பொருளாதாரக் கொள்கையைப் பின்பற்றினால், தாம் நாசமாகிவிடுவோமோ என இடதுசாரி சுதந்திரக்கட்சியின் தலைவரான மைத்திரி பயந்தார். ரணிலின் முதலாளித்துவ பொருளாதாரக் கொள்கைகளை எதிர்ப்பதில் மைத்திரிபால மட்டுப்படுத்தப்பட்டதால் 2015 முதல் 2019 வரைக்கும் இடையிலான அந்தக் காலப்பகுதியில் மகிந்த வெளிப்பட்டார்.

தானும் சுதந்திரக் கட்சியினரும் சர்வதேச நாணய நிதியத்திற்கு எதிரானவர்கள் என மஹிந்த பகிரங்கமாக தெரிவித்தார். அத்தகையவர்கள் சேர்ந்து உருவாக்கியதே பொது ஜன பெரமுன என்றார். கோத்தபய ஜனாதிபதியானவுடன், ரணிலின் சர்வதேச நாணய நிதிய ஒப்பந்தத்தில் இருந்து விலகினார். ரணில் அமுல்படுத்திய சர்வதேச நாணய நிதியத்தின் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் விலைச் சூத்திரங்களுக்கு எதிராக மக்கள் இருப்பதை அறிந்திருந்ததால் 2019இல் கோட்டாபய ஜனாதிபதி ஆக்கப்பட்டார். ஆனால், 2024இல் மக்கள் அநுரவை ஜனாதிபதியாக்கியது ரணில் கையொப்பமிட்ட சர்வதேச நாணய நிதிய ஒப்பந்தத்தை மாற்றம் ஏதுமின்றி அமுல்படுத்துவதற்காக அல்ல.

ரணில் நாட்டை சர்வதேச நாணய நிதியத்திற்கு விற்று விட்டார் என்றும், நாட்டின் நெருக்கடிகளுக்கு சர்வதேச நாணய நிதியம் தீர்வாகாது என்றும் அநுர உள்ளிட்ட தேசிய மக்கள் சக்தி தேர்தல் காலத்தில் மக்களிடம் கூறியது. அநுரவிற்கு வாக்களித்த இடதுசாரி மக்கள், சர்வதேச நாணய நிதியத்திற்குப் பதிலாக அநுர புதிய மாற்று பொருளாதார வேலைத் திட்டத்தை முன்வைப்பார் என எதிர்பார்த்தனர். அநுரவுக்கு வாக்களித்த வலதுசாரி மக்கள், ரணிலின் சர்வதேச நாணய நிதிய ஒப்பந்தத்தை அநுரா குப்பையில் போட்டுவிட்டு புதிய சர்வதேச நாணய நிதிய ஒப்பந்தத்தை உருவாக்குவார் என நினைத்தனர்.

இவை இரண்டும் நடக்கவில்லை. அநுர ஜனாதிபதியான பின்னர், ரணிலின் சர்வதேச நாணய நிதிய ஒப்பந்தம் எழுத்துப்பூர்வமாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. வருமான வரி செலுத்தும் வரம்பை மாற்றுமாறு சர்வதேச நாணய நிதியத்திடம் முன்மொழிந்தவர் ரணில். ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் ரணில் அதனை நடைமுறைப்படுத்தவில்லை என்பது ரணிலின் முட்டாள்தனம். தற்போது ரணிலின் பொருளாதாரக் கொள்கைகளை அநுர அமுல்படுத்துவதால் ரணிலின் ஆதரவாளர்களும் உற்சாகமடைந்து அநுரவைப் பாராட்டி வருகின்றனர். இடதுசாரிகள் ஏதோ வித்தியாசமான உணவை சாப்பிட்டது போல் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்.

''இப்படியே தொடர்ந்தால் ஆட்சி இடது பக்கச் சார்பானதாக ஆகிவிடுமா?''

”ரணிலின் சர்வதேச நாணய நிதிய ஒப்பந்தத்தை மாற்ற முற்பட்டால் அது பெரிய பிரச்சினையாகிவிடும். கடன் கொடுத்தவர்கள் வழக்குத் தொடர்வார்கள். நாணய நிதியம் வெளியேறிவிடும். நாடு மீண்டும் திவாலாகிவிடும்...'' என்பதுதான் ஆட்சியைப் பிடித்ததும் அநுரவைச் சூழ்ந்துள்ள ஐ.தே.க ஆலோசகர்கள் வழங்கிய அறிவுரையாகும்.

மஹிந்த 2005இல் நாட்டைக் கைப்பற்றியபோது ரணில் போர் நிறுத்தம் குறித்து பெரிய அளவில் பேசிக்கொண்டிருந்தார். அதற்குள் அமெரிக்கா, பிரித்தானியா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகிய நாடுகள் போர் நிறுத்தத்தின் மூலம் விடுதலைப் புலிகளின் சமாதான முன்னெடுப்புகளின் இணைத் தலைவர்களாக அறிவிக்கப்பட்டிருந்தன. புலிகளுக்கும் ஆளும்தரப்புக்கும் இடையிலான சமாதான முன்னெடுப்புகள் நடுநிலையாளர்களான நோர்வேயினால் ஒருங்கிணைக்கப்பட்டது. 2004வரை ஆட்சியிலிருந்த சந்திரிகாவும் ரணிலின் வலையில் சிக்கி, பிரபாகரனுடன் சுனாமி நிவாரணக் கட்டமைப்பை அமுல்படுத்த ஒப்பந்தம் செய்திருந்தார். இந்த முடிச்சுக்களை உறுதியாகப் பிடித்திருந்த ஆலோசகர்கள் மகிந்த ஜனாதிபதியான போது அவரைச் சூழ்ந்திருந்தனர்.

''போர் நிறுத்தத்தில் இருந்து விலகாதீர்கள். அமெரிக்காவும், பிரித்தானியாவும், ஐரோப்பாவும் புலிகளுக்கு ஆயுதங்களை கொடுத்து இராணுவத்தை தோற்கடிக்கும். நாடு பிளவுபடும். வெளிநாட்டு உதவி நிறுத்தப்படும். உங்கள் ஜனாதிபதி பதவி பறிபோகும்...'''' என்று அவர்கள் ஆலோசனை வழங்கினர். மகிந்த அவர்களைப் பற்றிக் கவலைப்படவில்லை. பொருட்படுத்தவில்லை.

மகிந்த 2005ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் போர் நிறுத்த ஒப்பந்தத்தில் இருந்து விலகுவதற்கான ஆணையைப் பெற்றார். அதுவே ஜே.வி.பி மஹிந்தவை ஆதரிப்பதற்கான முதல் நிபந்தனையாகவும் இருந்தது. அந்த நிபந்தனையை மகிந்தவால் நிறைவேற்ற முடியும் என்று அன்று ஜே.வி.பியே நம்பியிருக்கவில்லை. ஆனால், அமெரிக்கா உள்ளிட்ட உலகின் பலம் வாய்ந்த நாடுகளை புறக்கணித்து நோர்வேயை உதைத்து அந்த முடிவை எடுத்தார் மஹிந்த. ”பொறிமுறை மாற்றம்” (சிஸ்டம் சேஞ்ச்) என்பது அவ்வளவுதான்.

இன்றோ வலதுசாரிகளால் கட்டமைக்கப்பட்ட ”பொறிமுறை” (சிஸ்டம்) இடதுசாரிகளால் பாதுகாக்கப்பட்டு வருகின்றது. ஏற்கனவே இருக்கும் இந்தப் பொறிமுறை பாதுகாப்பானது. அதுவே தற்போதைய ஆளும்தரப்பையும் வடிவமைக்கிறது.



# காணாமல் போன உறவுகள் கிளிநொச்சியில் போராட்டம்

கிளிநொச்சி மாவட்ட காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் நேற்று (திங்கட்கிழமை) கிளிநொச்சியில் தமது மாதாந்த ஆர்ப்பாட்டத்தில் முன்னேடுத்திருந்தனர்.

இதன் போது தெரிவிக்கையில் -

கடந்த யுத்தத்தின் போது தமது உறவுகளை இராணுவத்தினரிடம் ஒப்படைக்கப்பட்ட உறவுகளை மீட்டு தர கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.



இதன் போது தெரிவிக்கையில் தமது பிள்ளைகளை ஒப்படைத்து போராட்டத்தில் ஈடுபட்டு 28071 நாள்களாக தமது உறவுகளை தேடி போராட்டத்தில்ஈடுபட்டுவருவதாகவும் ஒவ்வொரு தேர்தல்கள் வரும் போதும் புதிதாக வருகின்ற நாட்டின் தலைவர்கள் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு உரிய தீர்வைப் பெற்றுத் தருவதாக கூறி வருகின்றனர் பின்னர் எவரும் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படுவதில்லை.







அதே போன்று தற்போது நாட்டில் வந்த ஜனாதிபதியும் ஜனாதிபதியாக வருவதற்கு முன்னர் காணாமல் போன உறவுகளுக்கு உரிய தீர்வை பெற்று தருவதாகவும் தானும் காணாமல் போன உறவுகள் பற்றி வேதனைகள் வலிகளும் தமக்குத் தெரியும்.

எனவே இது தொடர்பாக உரிய தீர்வைப் பெற்றுத் தர நடவடிக்கை எடுப்பேன் என கூறியிருந்தார் இருப்பினும் தற்பொழுது ஜனாதிபதி இது தொடர்பாக காணாமல் போன இவரிடமோ இது தொடர்பாக இந்த விடயமும் கதைக்கப்படவில்லை எனவே முன்னைய ஜனாதிபதிகளைப் போன்ற இவரும் செயல்படுவாரா? என தமக்கு அச்சம் இருந்துள்ளது எனத் தெரிவித்தனர்.

# பொருளாதார நெருக்கடியால் கல்வியில் பாதகமான தாக்கம்

## தரவுக் கணக்கெடுப்பில் தெரியவந்தது

பொருளாதார நெருக்கடியின் பாதகமானமுடிவுகளால்பிள்ளைகளின் கல்வியில்குறிப்பிடத்தக்கஎதிர்மறையான தாக்கங்கள் ஏற்பட்டுள்ளதென தொகைமதிப்பு மற்றும் புள்ளி விவரவியல் திணைக்களம் நிகழ்த்திய தரவுக் கணக்கெடுப்பின் பிரகாரம் தெளிவாகிறது.

அதன் பிரகாரம், பாடசாலை செல்லும் பிள்ளைகளில் 55 சதவீதமானோர் கல்வியில் பாதகமாக பாதிக்கப்பட்டுள்ளனர் என அறியப் பட்டுள்ளது. கிராமப்புறங்களிலும் பெருந்தோட்டப் பகுதிகளிலும் இச் சதவீதம் அதிகமாக இருப்பதை அவதானிக்க முடிகிறது.

இவ்வாறு பாதிக்கப்பட்ட பிள்ளைகளில் 53.2 சதவீதமானோர் பாடசாலை எழுதுவினைப் பொருள்களை கொள்வனவுசெய்வதை குறைத்து அல்லது நிறுத்தியுள்ளதுடன், 26.1 சதவீதமானோர் முன்னர் பயன்படுத்திய பாடசாலை எழுதுவினைப் பொருள்களை மீளப் பயன்படுத்துவதற்கும் எண்ணியுள்ளனர்;.

இவ்வாறு பாதிக்கப்பட்ட பாடசாலை பிள்ளைகளின் கல்வியில் ஏற்பட்டுள்ள எதிர்மறையான தாக்கங்களைகுறைக்கும்நோக்கில்,2025 ஆம் ஆண்டில் கல்வி நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு எழுதுவினைப் பொருள்கள் கொள்வனவிற்காக பாடசாலை பிள்ளைகளிற்கு கொடுப்பனவை வழங்குவதற்கு அரசாங்கம் உத்தேசித்துள்ளது.

இங்கு, பாடசாலைக் கல்வி பெறுகின்ற அஸ்வெசும பயனாளிக் குடும்பங்களின் பிள்ளைகளிற்காக ஒரு பிள்ளைக்கு ரூ. 6,000.00 எழுது கருவிப் பொருள்கள் கொள்வனவுக்கான கொடுப்பனவை வழங்குவதற்குத் தேவையான நிதி ஒதுக்கீடு வேறாக்கப்பட்டுள்ளதுடன் அதனை 27.12.2024 இற்குள் அஸ்வெசும வங்கிக் கணக்குகள் மூலம் செலுத்துவதற்கு திறைசேரி ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.

மேலும், ஏனைய தகுந்த பாடசாலைப் பிள்ளைகளிற்கு 2025 ஆம் ஆண்டிற்கு ஒரு பிள்ளைக்கு தலா 6000 ரூபா பெறுமதியான எழுத்துக்கருவிப் பொருட்களைப் பெற்றுக்கொள்வதற்கு அவசியமான கொடுப்பனவிற்கான நிதி ஒதுக்கீடு கல்வி உயர் கல்வி மற்றும் தொழில் கல்வி அமைச்சிற்கு வழங்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது

இதனூடாக பாடசாலைக் கல்விற்காகபெற்றோரால்சுமக்கப்படும் செலவுகளிற்கு நிவாரணமளித்து அதனூடாகபாடசாலைப்பிள்ளைகளின் கல்வியைத் தொடர்ச்சியாக மேற்கொள்வதினூடாக அவர்களின் எதிர்காலத்தைப் பாதுகாப்பது அரசின் நம்பிக்கையாகும்.

# ஜனாதிபதி தேர்தலில் தமிழ்ப் பொதுவேட்பாளரின் தேறிய விளைவு கட்சியில் இருந்து அவரது நீக்கமே

## வழக்கிலும் சிக்கினார் என ஐங்கரநேசன் ஆதங்கம்

ஜனாதிபதித் தேர்தலின்போது தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகள் சிலவும்தமிழ்மக்கள்பொதுச்சபையும் இணைந்து உருவாக்கிய தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பு தமிழ் வேட்பாளர் ஒருவரை பொதுவாக நிறுத்தியிருந்தது.

கோட்பாட்டு ரீதியாக இதனை ஏற்றுக்கொண்டதமிழ்த்தேசியப்பசுமை இயக்கமும் இவரது வெற்றிக்காகக் கடுமையாக உழைத்தும் இருந்தது.

அவர் இரண்டு இலட்சத்துக்கும் அதிகமான வாக்குகளைத் திரட்டியிருந்தார். இது தமிழ் மக்களைத் தேசமாகத் திரட்டுவதில் கிடைத்த வெற்றியாகவே நோக்கப்பட்டது. ஆனால், நாடாளுமன்றத் தேர்தலில் தேசமாகத் திரட்டப்பட்ட மக்கள் புதிய வழிகாட்டுதல் இல்லாததால் பிரிந்து நின்று தங்கள்

விருப்பத்துக்கு வாக்களித்தார்கள். இந்நிலையில் தமிழ்ப் பொதுவேட்பாளரின்தேறியவிளைவாக கட்சியில்

இருந்து அவர் நீக்கப்பட்டதும் ஜனாதிபதித் தேர்தலில் அவர் செலவழித்த கணக்கு விவரங்கள் தொடர்பான

வழக்கும் மாத்திரமே எஞ்சியுள்ளன என்று தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன்

தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

தமிழ்த்தேசியப்பசுமைஇயக்கத்தின் சமகால அரசியல் உரையரங்கு ஞாயிற்றுக்கிழமை ஆவரங்கால் கூட்டுறவுமண்டபத்தில்இடம்பெற்றது. இதற்குத் தலைமை வகித்து அவர்

உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவித்ததாவது:

போருக்குப் பின்னர் தமிழ் அரசியலை நெறிப்படுத்த சிவில் அமைப்புகள் எனப்படும் குடிசார்

அமைப்புகளின் வகிபாகம் இன்றியமையாததாக உணரப்பட்டது. இதன் விளைவாகவே தமிழ் மக்கள்பேரவை தோற்றம்

பெற்று வெற்றிகரமாக 'எழுகதமிழ்'பேரணிகளை நடத்திக் காட்டியிருந்தது. தமிழ் மக்களின் அரசியல்

பிரச்சினைக்காகக்குறைந்தபட்சத் தீர்வுத் திட்டம் ஒன்றையும் முன்வைத்திருந்தது. தமிழ் மக்கள் பேரவையின்

மீதுமக்கள்மிகுந்தஎதிர்பார்ப்பையும் கொண்டிருந்தார்கள். ஆனால், தமிழ் மக்கள் பேரவையின் இணைத்

தலைவர்களில் ஒருவராக இருந்த சி.வி.விக்னேஸ்வரன் தனியான ஒரு கட்சியை ஆரம்பித்ததுடன் அது குறை ஆயுளுடன்

முடிவுக்கு வந்தது.

குடிசார் அமைப்புகள் இணைந்து உருவாக்கிய தமிழ் மக்கள் பொதுச்சபை மீதும் மக்கள் நம்பிக்கை கொண்டிருந்தார்கள். இதனால்தான் பொதுவேட்பாளருக்கு தமிழ் மக்கள் திரளாக வாக்களித்திருந்தார்கள். ஆனால், அந்த நம்பிக்கையும் இப்போது பொய்த்துப்போய்விட்டது. உரிய வழிவரைபடம் அதனிடம் இல்லாத காரணத்தால் ஜனாதிபதித் தேர்தலைத் தொடர்ந்து குறுகிய கால இடைவெளியில் வந்த நாடாளுமன்றத் தேர்தலை அது எதிர்கொள்ளமுடியாமல் பின்வாங்கியது.




தமிழ்த்தேசிய உணர்வுடன் தன் பின்னால் திரண்ட மக்களுக்கு அது வழிகாட்டத் தவறியது. இதுவும் வடக்குக் கிழக்கில் ஜே.வி.பி இன் வெற்றிக்கு ஒரு காரணமாக அமைந்தது.

மக்கள் சிவில் சமூக அமைப்புகளை நம்பமுடியாத ஒரு சூழ்நிலையை சிவில் அமைப்புகளே இன்று உருவாக்கி

விட்டன. அரசியலில் சிவில் அமைப்புகள் தங்களின் வகிபாகம் குறித்து மீள் பரிசீலனை செய்தால் தவிர

அவற்றால்இன்னொருகட்டத்துக்கு நகரமுடியாது. சிவில் அமைப்புகளும் சில கட்சிகளின் பினாமிகளாகவே

உள்ளன.

சிவில் அமைப்புகளின் மூலம் கிடைக்கும் பிரபல்யத்தைப் பயன்படுத்தி சிலர் தேர்தலில் குதிப்பவர்களாகவும் இருக்கிறார்கள். கட்சி அரசியலை முன்னிறுத்தாத - தமிழ்த்தேசிய அரசியலை மட்டுமே குறிக்கோளாகக் கொண்ட ஒரு மக்கள் இயக்கமாக சிவில் சமூகங்கள் மாற்றம் பெற்றாலொளிய

தமிழ்த்தேசிய அரசியலை வருங்காலங்களில் அவற்றால் நெறிப்படுத்த முடியாது என்றும் தெரிவித்தார்.

# பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்க கல்முனை கிளைக் கௌரவிப்பு நிகழ்வு

(நூருல் ஹுதா உமர்)

இலங்கை பொதுச்சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் கல்முனைகிளையின்வருடாந்த ஒன்று கூடலும் பொதுச் சுகாதார பரிசோதகர்களாக பணியாற்றி ஓய்வு பெற்றுச் சென்றவர்களை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வும் சனிக்கிழமை அக்கரைப்பற்று மெங்கோ கார்டனில் இடம்பெற்றது.

சங்கத்தின் தலைவரும் மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகருமான ஜே.எம்.நிஸ்தார் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸதீன் பிரதம அதிதியாகவும், பிராந்திய கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.சீ.எம்.மாஹிர் கௌரவ அதிதியாகவும் கலந்து சிறப்பித்தார்கள்.

இதன்போது இலங்கை பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் கல்முனை கிளையின் மேலங்கி அறிமுகம் செய்து வைக்கப்பட்டதுடன் மிக நீண்டகாலமாக பொதுச் சுகாதார பரிசோதகர்களாக பணியாற்றி அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றுச் செல்லும் ஐ.எல்.றாசிக், அப்பாஸ் எம்.நியாஸ், சீ.பி.எம்.ஹனிபா ஆகியோர் அதிதிகளால் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.

அத்துடன் பல்வேறு அர்ப்பணிப்புகளுக்குமத்தியில் சுகாதாரத்துறைக்கு பொதுச் சுகாதார பரிசோதகர்கள் ஆற்றிவரும் அளப்பெரும் சேவை குறித்து பாராட்டி பேசியபிராந்தியபணிப்பாளர், சகல பொதுச் சுகாதார பரிசோதகர்களுக்கும் அவர்களது அலுவலகபணிகளை சிறப்பாகமுன்னெடுப்பதற்காக தெரிவித்தார்.



## விதி மீறலில் ஈடுபட்ட 7,676 சாரதிகள் கைது

நாடளாவிய ரீதியில் 24 மணித்தியாலங்களுக்குள் (29 ஆம் திகதி காலை 06.00 மணி முதல் 30 ஆம் திகதி காலை 06.00 மணி வரை) போக்குவரத்து விதிமுறைகளை மீறிய 7,676 சாரதிகள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரியவின் பணிப்புரைக்கு அமைய, நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கைகளின் போதே இந்த சாரதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதன்படி, மது போதையில் வாகனங்களை செலுத்திய 413 சாரதிகளும், பாதுகாப்பற்ற முறையில் வாகனங்களை செலுத்திய 49 சாரதிகளும், அதிக வேகத்தில் வாகனங்களை செலுத்திய 110 சாரதிகளும், சாரதி அனுமதிப்பத்திரங்கள் தொடர்பான குற்றங்கள் தொடர்பில் 694 சாரதிகளும், ஏனைய போக்குவரத்து விதி மீறல்கள் தொடர்பில் 5,324 சாரதிகளும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## ஊடகவியலாளர் மீதான தாக்குதல்: சந்தேகநபர் பிணையில் விடுவிப்பு

கிளிநொச்சியில் ஊடகவியலாளர் மு. தமிழ்ச்செல்வனை கடந்த 26ஆம் திகதி தாக்கி கடத்த முற்பட்ட சந்தேக நபர்கள் கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றில் நேற்று (திங்கட்கிழமை) ஆள் அடையாள அணிவகுப்புக்கு முற்படுத்தப்பட்டனர்.

இதன்போது ஊடகவியலாளரால் சந்தேக நபர்கள் இருவரும் சரியாக அடையாளம் காட்டப்பட்டனர்.

இதனையடுத்து, வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு விசாரிக்கப்பட்டதை தொடர்ந்து, சந்தேக நபர்கள் இருவருக்கும் பிணை வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் இவ்வழக்கு எதிர்வரும் மார்ச் மாதத்துக்கு தவணையிடப்பட்டுள்ளது.



# காணாமல் ஆக்கப்பட்டோருக்கு ஐ.நாவே நீதியைப் பெற்றுத் தா

## வவுனியாவில் ஆர்ப்பாட்டம்

'காணாமல் ஆக்கப்பட்டோருக்கு ஐ.நாவே நீதியைப் பெற்றுத் தா' என கோஷம் எழுப்பி வவுனியாவில் ஆர்ப்பாட்டம் நேற்று (திங்கட்கிழமை) நடத்தப்பட்டது.

வவுனியா மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் ஏற்பாட்டில் வவுனியா பழைய பஸ் நிலையத்துக்கு முன்பாக இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

இதன்போது ஆர்ப்பாட்டக்காரர்கள் காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளின் படங்களையும் ஏந்தியவாறு 'காணாமல் ஆக்கப்பட்ட எமது பிள்ளைகள் எங்கே', 'இராணுவத்தினரிடம் கையில் ஒப்படைக்கப்பட்டவர்களுக்கு நடந்தது என்ன?', 'ஐ.நாவே நீதியைப் பெற்றுத் தா', '15 வருடமாக போராடும் எமக்கு விடிவு இல்லையா' என பல்வேறு கோஷங்களை எழுப்பினர்.





இதன்போது அவர்கள் கருத்து தெரிவிக்கையில், நாட்டில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறும் ஐ.நா அமர்வில் எமக்கான நீதியை பெற்றுத் தர ஐ.நா வலியுறுத்த வேண்டும். 2025ஆம் ஆண்டிலாவது எமது 15 வருட போராட்டத்துக்கு நீதி கிடைக்க வேண்டும். - என்றனர்.



இதில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

# யாழில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு நீதி வேண்டி போராட்டம்

இலங்கையில் உள் நாட்டு யுத்தம் நடைபெற்ற காலப்பகுதியில் வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளின் வாழும் உறவுகள் நேற்று (திங்கட்கிழமை) தமது காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு நீதி வேண்டி போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.





நீதி வேண்டி வடக்கு மாகாணத்தின் மாவட்டங்கள் தோறும் மாதாந்தம் முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டத்தில் ஓர் அங்கமாகவே குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் முனியப்பர் ஆலய முன்றிலில் ஆரம்பிக்கப்பட்ட குறித்த போராடமானது ஊர்வலமாக யாழ். பிரதான வீதி மற்றும் காங்கேசன்துறை வீதியூடாக சென்று யாழ் மத்திய பஸ் நிலையத்தை அடைந்தது.

யாழ் மத்திய பஸ் நிலையத்தில் ஒன்று கூடிய வாழும் உறவுகள் தமது வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் நிலைகுறித்து சர்வதேசமே தீர்வை வழங்க வேண்டும் போன்ற சுலோகங்களை வலியுறுத்தி போராட்டத்தை முன்னெடுத்தனர்.

# உள்நாட்டு துப்பாக்கி, கோடாவுடன் பூவரசன்குளத்தில் ஒரு நபர் கைது

வவுனியா, பூவரசன்குளம் பகுதியில் உள்நாட்டுத் துப்பாக்கி மற்றும் 18,000 மில்லி மீற்றர் கோடாவுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பூவரசன்குளம் பொலிஸார் நேற்று (திங்கட்கிழமை) தெரிவித்தனர்.

வவுனியா, பூவரசன்குளம் பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து இரண்டாம் செங்கல்படை பகுதியில் விசேட சுற்றிவளைப்பு ஒன்றை பூவரசன்குளம் பொலிஸார் மேற்கொண்டனர்.

இதன்போது உள்நாட்டுத் துப்பாக்கி மற்றும் பெரல் ஒன்றில் அடைக்கப்பட்டிருந்த கசிப்பு உற்பத்திக்கான 18,000 மில்லிலீற்றர் கோடா என்பன கைப்பற்றப்பட்டதுடன், அவற்றை வைத்திருந்த நபர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்டவரை மேலதிக விசாரணைகளின் பின் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் பூவரசன்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

# மகிந்தவின் பேச்சாளராக ரவீந்திர மனோஜ் கமகே

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் உத்தியோகபூர்வ ஊடகப் பேச்சாளராக கடந்த 20 ஆம் திகதி சட்டத்தரணி ரவீந்திர மனோஜ் கமகே நியமிக்கப்பட்டுள்ளார்.



இதற்கான நியமனக் கடிதம் நேற்று (திங்கட்கிழமை) விஜயராமவிலுள்ள முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் உத்தியோகபூர்வ இல்லத்தில் வைத்து சட்டத்தரணி ரவீந்திர மனோஜ் கமகேவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

# அரச ஊழியர்களுக்கான பண்டிகை முன்பணத்தை 40 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்குமாறு கோரிக்கை

அரச ஊழியர்களுக்கு வழங்கப்படும் 10,000 ரூபா பண்டிகை முன்பணத்தை இவ்வருடம் குறைந்தது 40,000 ரூபாவாக அதிகரிக்கு மாறு இலங்கை அரச உத்தியோகத்தர்களின் தொழிற்சங்க சம்மேளனத்தின் தலைவர் சுமித் கொடிகார அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அரசிடம் எழுத்து மூலம் கோரிக்கை விடுப்பதாக கூறிய அவர், 10,000 ரூபா தொகையை வைத்து இக்காலத்தில் எதுவும் செய்ய முடியாது என்றும், இம்முறை பண்டிகை முன்பணமாக குறைந்த பட்சம் 40,000 ரூபாவை அரசு அதிகாரிகளுக்கு வழங்க வேண்டும் என்றும் கூறினார்.

மேலும், அரசு பாடசாலை மாணவர்களுக்கு வழங்க உத்தேசித்துள்ள 6,000 ரூபா உதவித் தொகையை அரசு அலுவலர்களின் பிள்ளைகள் உட்பட அனைத்து மாணவர்களுக்கும் பாரபட்சமின்றி வழங்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

அனைத்து பாடசாலை மாணவர்களுக்கும் சீருடை மற்றும் பாடப்புத்தகங்களை வழங்குவது போன்று அனைத்து மாணவர்களுக்கும் இந்த தொகையை வழங்குமாறு ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்திடம் அவர் கோரிக்கை விடுக்கிறார்.

# நீதி தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சரை சந்தித்தார் பிரித்தானிய உயர்ஸ்தானிகர்

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் ஹர்ஷன நாணயக்காரவுக்கும் இலங்கைக்கான பிரித்தானிய உயர் ஸ்தானிகர் அன்று பட்ரிக்கிற்கும் இடையிலான சந்திப்பொன்று இடம்பெற்றது.

இந்த சந்திப்பு நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சில் நேற்று இடம்பெற்றது.





காலைக்கதிர் Kalaikkathir

# தென்மராட்சியில் சுண்ணக்கல் அகழ்ந்து திருமலைக்கு எடுத்துச் செல்லப்படுகிறது

## அந்தப் பகுதி மக்கள் குற்றச்சாட்டு

யாழ். மாவட்டத்தின் தென்மராட்சிக் கிராமங்களில் இருந்து சுண்ணக்கல் அகழ்ந்தெடுக்கப்பட்டுதிருகோணமலைக்கு கொண்டு சென்று விற்பனை செய்யப்படுகிறது இதனை கட்டுப்படுத்த எவரும் நடவடிக்கை எடுக்கவில்லை என பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். இந்தக் கல் அகழ்வு அனுமதி எதுவுமின்றிக் களவாகவே நடக்கின்றன என்று தாங்கள் சந்தேகப்படுகின்றனர் என்றும்மக்கள்தெரிவிக்கின்றனர்.

தென்மராட்சியில் குறிப்பாக , மந்துவில் , வேம்பிராய் பகுதிகளில் தனியார் ஒருவர் பெருமளவான நிலப்பரப்பினை வாங்கி, அதற்குள்ளிருந்து மண்,



சுண்ணக்கல், போன்றவற்றை அகழ்ந்து விற்பனை செய்து வருகின்றனர். யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல வர்த்தகர் ஒருவர் , சுண்ணக்கற்களை அவரிடம் வாங்கி அவற்றை திருகோணமலையில் உள்ள சீமெந்துஉற்பத்திநிலையத்திற்கு விற்பனை செய்து வருகின்றார். இவர்களின்செயப்பாடுகளினால் அப்பகுதிகளில்பெரும்பள்ளங்கள் தோன்றியுள்ளன என்கிறார்கள் மக்கள்.

தமது காணிகளில் கனிம வளங்களை அகழ்ந்தவர்கள் தற்போது , அரச காணிகளிலும் தமது கைவரிசையை காட்ட தொடங்கியுள்ளனர் என்றும் அவர்கள்குற்றஞ்சாட்டுகின்றனர். பெருமளவில் சுண்ணக்கல் அகழ்வு இடம்பெறுவதால் , நிலத்தடி நீர் உவராகும் வாய்ப்பு அதிகரிக்கின்றது என்றும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

அந்நிலையில் அதனை கட்டுப்படுத்த வேண்டும் எனபலதரப்பினரும் கோரி வந்த நிலையில், 2024 மே 30 யாழ் . மாவட்டச் செயலகத்தில்இடம்பெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில், 'சட்டவிரோதமான முறையில் 2 முதல் 3 மீற்றருக்கு மேல் ஆழமாக சுண்ணக்கல் அகழப்பட்டு, யாழ். மாவட்டத்தில் இருந்து அனுமதியற்ற முறையில் வர்த்தக நோக்குடன் பிற மாவட்டங்களுக்குசுண்ணக்கல் எடுத்துச் செல்லப்படுகிறது' என நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் குற்றம் சாட்டி அதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரினார்.

அதனை தொடர்ந்து ஜூன் மாதம் குறித்த பகுதிகளை அப்போதைய ஒருங்கிணைப்பு குழு தலைவரான டக்ளஸ் தேவானந்தா நேரில் சென்று பார்வையிட்டு இருந்தார். ஆனாலும்எந்தநடவடிக்கையும் எடுக்கப்படாத நிலையில் தொடர்ந்தும் சுண்ணக்கல் அகழ்வு இடம்பெற்று வருகின்றது.





இது தொடர்பில் கடந்த சில வாரங்களுக்கு முன்னர் தேசிய மக்கள் சக்தியின் யாழ் . மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருக்கும் மக்கள் முறையிட்டிருந்தர்ர்கள்.அவரும் அகழ்வுகள் இடம்பெறும் பகுதிகளை நேரில் சென்று பார்வையிட்டு, அகழ்வு பணிகளை இடைநிறுத்த விரைந்து நடவடிக்கை எடுப்பேன் எனஉறுதி அளித்திருந்தார். ஆனாலும் இன்னமும் அகழ்வு பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருவதனால் , தமது பகுதியை காப்பாற்ற உடனடியாக சம்பந்தப்பட்ட தரப்பினர் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என மக்கள் கோரியுள்ளனர்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 31.12.2024இல் வெளியிடப்பெற்றது